## 2ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கான

# அதிகாரப்பூர்வ வரைபடம் வெளியிடப்பட்டது

### 118.9 கி.மீட்டர் தூரத்தில் அமைகிறது

சென்னை, மார்ச் 3: 118.9 கி.மீட்டர் தூரத்தில் 2ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கான அதிகாரப்பூர்வ வழித்தட வரைபடத்தை மெட்ரோ ரயில் நிர்வாகம் வெளியிட்டுள்ளது. முதல்கட்டமாக சோழிங்கநல்லூர் - கோயம்பேடு இடையிலான வழித்தடத்தை விரைவில் முடிக்க நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

45.1 கி.மீட்டர் தூரத்திற்கான மெட்ரோ ரயில் முதல் திட்டத்தில் பணிகள் முடிக்கப்பட்டு முழுமையான சேவை தற்போது செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், 2ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் 118.9 கி.மீ தூரமும், ₹85,047 கோடி செலவிலும் அமைக்கப்பட உள்ளது. ஏற்கனவே, முதல் திட்டத்தில் 2 வழித்தடங்களில் சேவை பயன்பாட்டில் உள்ளது.

இந்நிலையில், 2வது திட்டத்தில் 3வது வழித்தடம் மாதவரம்-சிப்காட் வரையிலும், 4வது வழித்தடம் கோயம்பேடு- பூந்தமல்லி நெடுஞ்சாலை வரையிலும், 5வது வழித்தடம் மாதவரம்- சோழிங்கநல்லூர் வரையிலும் அமைக்கப்பட உள்ளது. இதற்கான அதிகாரப்பூர்வ வரைபடத்தை மெட்ரோ ரயில் நிர்வாகம் நேற்று வெளியிட்டது.

இதில் மாதவரம் - சிப்காட் 45.8 கி.மீட்டர் தூரத்திலும், கலங்கரைவிளக்கம்-பூந்தமல்லி நெடுஞ்சாலை 26.1 கி.மீட்டர் வரையிலும், மாதவரம்-சோழிங்கநல்லூர் இடையே 47 கி.மீ தூரத்திலும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.




▶ 2ம் கட்ட மெட்ரோ ரயில் திட்ட அதிகாரப்பூர்வ வழித்தட வரைபடம்.

3வது வழித்தடத்தில் மாதவரம் பால்பண்ணை, தபால் பெட்டி, முரளி மருத்துவமனை, மூலக்கடை, செம்பியம், பெரம்பூர் மார்க்கெட், பெரம்பூர் மெட்ரோ, அயனாவரம், ஓட்டேரி, பட்டாளம், பெரம்பூர் பேரக்ஸ் சாலை, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, கெல்லீஸ், கே.எம்.சி, சேத்துப்பட்டு மெட்ரோ, ஸ்டெர்லிங் சாலை, நுங்கம்பாக்கம், ஜெமினி, ராயப்பேட்டை அரசு மருத்துவமனை, ராதாகிருஷ்ணன் சாலை, திருமயிலை மெட்ரோ, மந்தைவெளி, பசுமைவழிசாலை, அடையார், அடையார் டெப்போ, இந்திரா நகர், திருவான்மியூர் மெட்ரோ, தரமணி இணைப்புசாலை, நேரு நகர், கந்தன்சாவடி, பெருங்குடி, துரைப்பாக்கம், மேட்டுக்குப்பம், பிடிசி காலனி, ஒக்கியம்பேட்டை, காரப்பாக்கம், ஒக்கியம் துரைப்பாக்கம், சோழிங்கநல்லூர், சோழிங்கநல்லூர் ஏரி, பொன்னியம்மன் ஆலயம், சத்தியபாமா பல்கலைக்கழகம், செயின்ட் ஜோசப் கல்லூரி, செம்மஞ்சேரி, காந்தி நகர், நாவலூர், சிறுசேரி, சிப்காட் ஆகிய ரயில் நிலையங்கள் வர உள்ளது.

4வது வழித்தடத்தில் கலங்கரை விளக்கம், கச்சேரி சாலை, திருமயிலை, ஆழ்வார்ப்பேட்டை கோயில், பாரதிதாசன் சாலை, அடையார் கேட், நந்தனம், நடேசன் பார்க், பனகல் பார்க், கோடம்பாக்கம், மீனாட்சி கல்லூரி, பவர் ஹவுஸ், வடபழனி, சாலிகிராமம், அவிச்சி பள்ளி, ஆழ்வார் திருநகர், வளசரவாக்கம், காரப்பாக்கம், ஆலப்பாக்கம் ஜங்ஷன், போரூர் ஜங்ஷன், சென்னை நெடுஞ்சாலை சந்திப்பு, ராமச்சந்திரா மருத்துவமனை, ஐயப்பன் தாங்கல் பேருந்துநிலையம், காட்டுப்பாக்கம், குமணன் சாவடி, கரையான்சாவடி, முல்லை தோட்டம், பூந்தமல்லி நெடுஞ்சாலை ஆகிய ரயில் நிலையங்கள் வர உள்ளது. 5வது வழித்தடத்தில், சோழிங்கநல்லூர், குளோபல் மருத்துவமனை, பெரும்பாக்கம், மேடவாக்கம் ஜங்ஷன், காமராஜ் கார்டன், மேடவாக்கம் கூட் ரோடு, வெள்ளக்கல், கோவிலம்பாக்கம், ஈச்சங்காடு, கீழ்கட்டளை, மடிப்பாக்கம், புழுதிவாக்கம், வாணுவம்பேட்டை, ஆதம்பாக்கம், பரங்கிமலை, ஆலந்தூர், பட்ரோடு, சி.டி.சி, சத்தியா நகர், டி.எல்.எப், போரூர் ஜங்ஷன், ஆலப்பாக்கம், காரப்பாக்கம், வளசரவாக்கம், ஆழ்வார் திருநகர், இளங்கோ நகர் பஸ் ஸ்டாப், சாய்நகர் பஸ் ஸ்டாப், கிரெயின் மார்க்கெட், கோயம்பேடு, காளியம்மன் கோயில் தெரு, கேந்திர வித்யாலயா, திருமங்கலம், அண்ணாநகர் டெப்போ, வில்லிவாக்கம் பஸ் டெர்மினல், வில்லிவாக்கம் மெட்ரோ, ஸ்ரீனிவாசா நகர், கொளத்தூர் ஜங்ஷன், ரெட்டேரி ஜங்ஷன், சாஸ்திரி நகர், வேல்முருகன் நகர், மஞ்சம்பாக்கம், வேணுகோபால் நகர், மாதவரம் ஆகிய ரயில் நிலையங்கள் வர உள்ளது.

தற்போது, இந்த வழித்தடங்களில் நிலம் கையகப்படுத்தும் பணியை மெட்ரோ ரயில் நிர்வாகம் தீவிரப்படுத்தியுள்ளது. முதல்கட்டமாக சோழிங்கநல்லூரில் தொடங்கி மாதவரம் பால்பண்ணை வழியே கோயம்பேடு வரையிலான 52.1 கி.மீட்டர் தூரத்திற்கான பணிகளை விரைவில் முடிக்க மெட்ரோ ரயில் நிர்வாகம் திட்டமிட்டு அதற்கான பணிகளை தொடங்கியுள்ளது. 3 வழித்தடங்களில் மொத்தம் 122 மெட்ரோ ரயில் நிலையங்களும் அமைய உள்ளது குறிப்பிடத்தக்கது.